

விழுப்புரம் வடக்கு மாவட்டம் மயிலம் சட்டமன்றத் தொகுதி மயிலம் தெற்கு ஒன்றிய தி.மு.க. சார்பில் கூட்டேரிப்பட்டில் நடைபெற்ற செயல் வீரர்கள் கூட்டத்தில் சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடு வாழ் தமிழர்கள் நலத்துறை அமைச்சர் செஞ்சி மஸ்தான் சிறப்புரையாற்றினார். உடன் விழுப்புரம் வடக்கு மாவட்டப் பொறுப்பாளர் டாக்டர் சேகர், முன்னாள் சட்டமன்ற உறுப்பினர்கள் டாக்டர் மாசிலாமணி, சேது நாதன், தலைமை தீர்மானக் குழு உறுப்பினர் செஞ்சி சிவா, மயிலம் வடக்கு ஒன்றியச் செயலாளர் மணிமாறன் உள்ளிட்ட கழக நிர்வாகிகள் உள்ளனர்.

# விருதுநகர் தெற்கு - வடக்கு மாவட்டச் செயற்குழுக் கூட்டம்!

## மாவட்டச் செயலாளர்கள் - அமைச்சர்கள் கே.கே.எஸ்.எஸ்.ஆர்.இராமச்சந்திரன் - தங்கம் தென்னரசு அறிக்கை!

விருதுநகர், செப். 25-

விருதுநகர் தெற்கு - வடக்கு மாவட்டக் கழகச் செயலாளர்கள், அமைச்சர்கள் கே.கே.எஸ்.எஸ்.ஆர். இராமச்சந்திரன், தங்கம் தென்னரசு ஆகியோர் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:-





விருதுநகர் தெற்கு/ வடக்கு மாவட்டச் செயற்குழு கூட்டம் வரும் 27.09.2024 வெள்ளிக்கிழமையன்று மாலை 4.00 மணியளவில், விருதுநகர், எஸ்.எஸ்.கே. கிராண்ட் கந்தசாமி திருமண மண்டபத்தில் மாவட்டக் கழக அவைத் தலைவர்கள் வி. தங்கராஜ், எஸ்.செல்வமணி ஆகியோர் தலைமையில் நடைபெற உள்ளது.

இக்கூட்டத்தில் மாநில நிர்வாகிகள், மாவட்ட கழக நிர்வாகிகள், தலைமைச் செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள், மாநகர, ஒன்றிய, நகர, பேரூர், பகுதிக் கழகச் செயலாளர்கள், மாவட்ட அணிகளின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், மாவட்டப் பிரதிநிதிகள், கழக முன்னோடிகள் அனைவரும் தவறாமல் கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறோம்.

பொருள் :

1. 29.09.2024 - அன்று விருதுநகருக்கு வருகை தரும் விளையாட்டுத் துறை அமைச்சர் அவர்களின் வரவேற்பு ஏற்பாடுகள் குறித்து 2. கழக ஆக்கப் பணிகள் குறித்து.

இவ்வாறு அவர்கள் அறிக்கையில் தெரிவித்துள்ளனர்.

### பாரத ஸ்டேட் வங்கியின் – முன்னாள்

# தொழிற்சங்கத் தலைவர்கள் கூட்டமைப்பின் கூட்டம்!

## தஞ்சையில் எஸ்.பி.இராமன் தலைமையில் நடந்தது!

தஞ்சை, செப். 25-

பாரத ஸ்டேட் வங்கியின் முன்னாள் தொழிற்சங்க தலைவர்கள் கூட்டமைப்பின் எட்டாவது பொதுக்குழு கூட்டம் தஞ்சாவூர் அகில இந்திய இன்சூரன்ஸ் ஊழியர் சங்க மாளிகை, சரோஜ் நினைவகத்தில் நடந்தது. எட்டாவது பொதுக்குழு கூட்டத்துக்கு அமைப்பின்தலைவர் எஸ்.பி. இராமன் தலைமை வகித்தார். துணைத்தலைவர் டி.வி. சந்திரசேகரன், துணைச் செயலாளர் எம். முருகையா, ஸ்டேட் பேங்க் ஊழியர் சங்கத்தின் முன்னாள் பொதுச் செயலாளர் டி.சிங்காரவேலு ஆகியோர் முன்னிலை வகித்தனர். வருகை தந்த அனைவரையும் நிர்வா கக் குழு உறுப்பினர் எம். ரகுநாதன் வரவேற்றார். வேலூர் ஆர். லோகநாதன் நன்றியுரை நிகழ்த்தினார். பிறகு நாட்டின் நலன், சமுதாய நலன், வங்கி ஒய்வூதியர் நலன் ஆகியவை குறித்த கீழ்க்கண்ட தீர்மானங்கள் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டன.

பாரத ஸ்டேட் பேங்க் ஒய்வூதியர்கள் ஒய்வு பெறும் போது பெறும் கம்யூட்டேஷன் தொகையை பத்து ஆண்டுகளுக்கு மட்டுமே பிடித்தம் செய்ய வேண்டும். 15 ஆண்டு பிடித்தம் செய்யும் நடைமுறையில் ஒவ்வொரு ஒய்வூதியரிடம் இருந்தும் ரூபாய் 827000 கூடுதலாக பிடித்தம் செய்வது மிகவும் தவறான செயலாக இருக்கும். கணக்கின் துல்லியத்துக்கு பெயர் பெற்ற நமது பாரத ஸ்டேட் வங்கி 10 வருடங்களுக்கு மட்டுமே பிடித்தம் செய்யும் நடை முறையை தாமதமின்றி உடனே நடை முறைப் படுத்துவதோடு கூடுதலாக பிடித்தம் செய்த தொகையை 8.5 சதவிகித வட்டியுடன் ஒய்வூதியர்களுக்கு வழங்க முன் வேண்டும் என AFCCoM வலியுறுத்தி கேட்டுக் கொள்கிறது.

1995 ஆம் ஆண்டு நாடாளுமன்றத்தின் இரு அவைகளிலும் நிறைவேற்ற ப் பட்ட வங்கி ஒய்வூதியர் பென்ஷன் சீரமைப்பு (PENSION UPDATION) குறித்த சட்டத்தை தாமதமின்றி நடைமுறைப்படுத்த வேண்டும். ஒய்வூதிய சீரமைப்பை பெறாமல் ஏறத்தாழ 1,50,000 ஒய்வூதியர்கள் கடந்த முப்பது வருடங்களில் மரணமடைந்துள்ளனர். ஒன்றிய அரசு ஒய்வூதியர்களுக்கும் மாநில அரசு ஒய்வூதியர்களுக்கும் ரிசர்வ் பேங்க் ஆஃப் இந்தியா, நபார்டு வங்கி ஆகியவற்றின் ஒய்வூதியர்களுக்கும் வழங்கப்படுவதைப் போல, ஊதிய உயர்வு ஒப்பந்தம் கையெழுத்தாகும் எல்லா தருணங்களிலும் 7 லட்சம் வங்கி ஊழியர்களுக்கும் ஒய்வூதியத்தை சீரமைத்து உயர்த்த தாமதமின்றி ஒன்றிய அரசு முன்வரவேண்டும்.

வங்கி ஒய்வூதியர்களின் ஹெல்த் இன்சூரன்ஸ் பிரிமியம் பொதுத்துறை வங்கி நிர்வாகங்களே ஏற்க வேண்டும் ஐந்து லட்சம் ரூபாய் வரை இலவச மருத்துவ சிகிச்சைக்கு வழி செய்யும் ஒன்றிய அரசின் ஆயுஷ்மான் பாரத் திட்டத்தை AFCCOM மனதார வரவேற்கிறது. அதே வேளையில் 60 வயதுக்கு மேற்பட்ட அனைத்து மூத்த குடி மக்களுக்கும் இத்திட்டத்தை விஸ்தரிக்க வேண்டும்.

தமிழகத்தின் அனைத்து மாவட்ட தலைநகரங்களில் ஆதரவற்ற முதியோர்களுக்கான இல்லம் அமைக்க தமிழக அரசு முன்வரவேண்டும்

தனியார் இன்சூரன்ஸ் நிறுவனங்களுக்கு ஆதரவாக ஒன்றிய அரசு முன்மொழிய உத்தேசித்துள்ள இன்சூரன்ஸ் சட்ட திருத்த மசோதாவை உடனே கைவிடுவதோடு நான்கு பொதுத்துறை பொதுக்காப்பீட்டு நிறுவனங்களை ஒன்றாக இணைக்க வேண்டும்.

தமிழ் நாட்டில் அனைத்து மாவட்ட தலைநகரங்களிலும் வங்கி மருந்தகங்களை நிறுவ (BANK DISPENSARIES) பாரத ஸ்டேட் வங்கி தாமதமின்றி முன்வரவேண்டும் என்பன உள்ளிட்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

பங்கேற்றோர் பொதுக்குழு கூட்டத்தில் உதவி பொருளாளர் வீ பூமி நாதன், நிர்வாகக்குழு உறுப்பினர்கள் திருவாரூர் என். பாண்டுரெங்கன், கோவை எம். ரகுநாதன், பாண்டிச்சேரி எஸ். கருணாகரன், வேலூர் ஆர். லோகநாதன், மதுரை பரவை எஸ். பாலசுப்பிரமணியன், ஒரத்தநாடு ஊழியர் சங்க முன்னாள் செயலாளர் வி. சம்பத், செயலாளர் எம். கே. மூர்த்தி ஆகியோர் கலந்து கொண்டனர்.



முதலமைச்சர் அவர்கள் சென்னை தலைமைச் செயலகத்தில் இருந்து (23.09.2024) அன்று காணொளிக் காட்சி வாயிலாக தென்காசி மாவட்டம் சுந்தரபாண்டியபுரம் பேரூராட்சி யில் முடிவுற்ற தமிழ்நாடு நுகர்பொருள் வாணிப கழக நேரடி கொள்முதல் நிலையத்தினைசுந்தரபாண்டிய புரத்தில் நடைபெற்ற நிகழ்வில் தென்காசி நாடாளுமன்ற உறுப்பினர் மரு.ராணி ஸ்ரீகுமார், மாவட்ட ஆட்சியர் ஏ.கே.கமல் கிஷோர்,தென்காசி சட்டமன்ற உறுப்பினர் பழனி நாடார் ஆகியோர் பங்கேற்று துவக்கி வைத்து பார்வையிட்டனர்.

### திண்டுக்கல் மாவட்டம் - ஒட்டன்சத்திரம் தொகுதியில்

# வளர்ச்சி திட்டப் பணிகள் குறித்த ஆய்வுக் கூட்டம்!

## அமைச்சர் அர. சக்கரபாணி பேச்சு!

ஒட்டன்சத்திரம், செப்.25-

திண்டுக்கல் மாவட்டம், ஒட்டன்சத்திரம் சட்டமன்றத் தொகுதியில் நடைபெற்று வரும் வளர்ச்சித் திட்ட பணிகள் குறித்த, ஆய்வு கூட்டத்தில் தலைமை வகித்து உணவு மற்றும் உணவுப் பொருள் வழங்கல் துறை அமைச்சர் அர.சக்கரபாணி பேசியதாவது:-

தமிழ்நாடு முதலமைச்சர் தமிழக மக்களின் நலனுக்காக பல்வேறு திட்டங்களை அறிவித்து, எல்லோருக்கும் எல்லாம் என்ற வகையில் தொடர்ந்து செயல்படுத்தி பொற்கால ஆட்சி நடத்தி வருகிறார். தேர்தல் நேரத்தில் சொன்ன வாக்குறுதிகளை நிறைவேற்றியதோடு மட்டுமின்றி, சொல்லாத பல்வேறு திட்டங்களை அறிவித்து, அத்திட்டங்களின் பயன்கள் அனைத்துத் தரப்பு மக்களையும் சென்றடையும் வகையில் செயல்படுத்தி வருகிறார்.

தமிழகத்தை இன்னும் 10 ஆண்டுகளில் குடிசை இல்லா மாநிலமாக மாற்ற வேண்டும் என்ற உயர்ந்த எண்ணத்தில், ஏழை, எளிய மக்களுக்கு வீடு கட்டி வழங்கும் வகையில் கலைஞரின் கனவு இல்லம் திட்டத்தில் 8.00 இலட்சம் வீடுகள் கட்டி வழங்கப்படவுள்ளது. அதில் நடப்பு ஆண்டில் ஒரு லட்சம் வீடுகள் கட்டி வழங்கப்படவுள்ளது. அதே போல் தமிழகத்தில் ஏற்கனவே தொகுப்பு வீடுகள் திட்டத்தில் கட்டப்பட்ட பழைய வீடுகளை பழுது பார்த்து வழங்குவதற்காக ரூ.2,000 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

அந்த வகையில், ஒட்டன்சத்திரம் சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட பகுதிகளில் பல்வேறு வளர்ச்சித் திட்டப்பணிகள் நிறைவேற்றப்பட்டுள்ளன. ஒட்டன்சத்திரம் சட்டமன்றத் தொகுதியில் செயல்படுத்தப்பட்டுள்ள திட்டப்பணிகள், நடைபெற்று வரும் திட்டப் பணிகள், நிறைவேற்றப் படவுள்ள திட்டப்பணிகள் குறித்து துறை அலுவலர்களுடன் இன்று ஆலோசனை மேற்கொள்ளப்படுகிறது.

ஒட்டன்சத்திரம் சட்ட மன்ற தொகுதியில் ஏழை, எளிய மக்களுக்கு இலவச வீட்டுமனைப் பட்டாக்கள் வழங்கப்பட்டு வருகின்றன. தகுதியுள்ள அனைவருக்கும் வீட்டுமனைப்பட்டா வழங்கிட நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

ஒட்டன்சத்திரம் சட்ட மன்ற தொகுதிக்குட்பட்ட பகுதியில் ரூ.1000 கோடி மதிப்பீட்டில் காவிரி கூட்டுக்குடிநீர் திட்டப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இத்திட்டத்தை வரும் மார்ச் மாதத்திற்குள் பயன்பாட்டிற்கு கொண்டு வர பணிகளை விரைந்து முடித்திட சம்பந்தப்பட்ட அலுவலர்கள் நடவடிக்கை மேற்கொள்ள அறிவுறுத்தப் பட்டுள்ளது.

கீரனூர் பேரூராட்சியில் 432 வீடுகளுடனும், ஒட்டன்சத்திரத்தில் 472 வீடுகளுடனும் அடுக்குமாடி குடியிருப்புகள் கட்டப்படவுள்ளன. காளாஞ்சிபட்டியில் கலைஞர் நூற்றாண்டு ஒருங்கிணைந்த போட்டித் தேர்வு பயிற்சி மையம் அமைக்கப்பட்டுள்ளது. இதன்மூலம் ஏராளமான படித்த இளைஞர்கள் பயிற்சி பெற்று, போட்டித் தேர்வுகளுக்கு தயாராகி வருகின்றனர்.

ஒட்டன்சத்திரம் சட்ட மன்ற தொகுதியில், நாமக்கு நாமே திட்டம், நபார்டு மற்றும் கிராம சாலைகள் திட்டம், பாராளுமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதி, மகாத்மாகாந்தி தேசிய ஊரக வேலை வாய்ப்பு உறுதித்திட்டம் உள்ளிட்ட பல்வேறு திட்டங்களின் கீழ் பல்வேறு வளர்ச்சித்திட்டப்பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இந்தப் பணிகளை விரைந்து முடிப்பதற்கான நடவடிக்கைகளை சம்பந்தப்பட்ட துறை அலுவலர்கள் மேற்கொள்ள வேண்டும். ஒட்டன்சத்திரம் தொகுதி மட்டுமின்றி திண்டுக்கல் மாவட்டத்தில் உள்ள 7 சட்டமன்ற தொகுதிகளிலும் மேற்கொள்ளப்பட்டு வரும் வளர்ச்சிப்பணிகளை விரைந்து முடித்து பொது மக்கள் பயன்பாட்டிற்கு கொண்டுவர துரித நடவடிக்கைகள் மேற்கொள்ள வேண்டும்.

தமிழ்நாடு முதலமைச்சர் விவசாயிகளின் மேம்பாட்டிற்காக பல்வேறு திட்டங்களை அறிவித்து செயல்படுத்தி வருகிறார்கள். மரம் வளர்த்தால் மரம் நம்மை வளர்க்கும் என்ற முத்தமிழறிஞர் கலைஞர் வாக்குப் படி, மரக்கன்றுகள் நடும் பணி மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

பேரறிஞர் அண்ணா, மக்களிடம் செல், மக்களோடு பழகு, மக்களை நேசி அப்போதுதான் மக்கள் மனதில் இடம்பெற முடியும் என கூறியுள்ளார். அதன்படி உள்ளாட்சி அமைப்பு பிரதிநிதிகள் மக்களிடம் சென்று அவர்களின் தேவைகளை கேட்டறிந்து, அந்த தேவைகள் குறித்து உயர் அலுவலர்களிடம் தெரிவித்து, அவற்றை நிறைவேற்றிட தகுந்த நடவடிக்கைகள் மேற்கொள்ள வேண்டும்.

பொதுமக்களுக்கு தேவையான வளர்ச்சிப் பணிகள் குறித்து உள்ளாட்சி அமைப்பு பிரதிநிதிகள் ஆலோசனைக் கூட்டம் நடத்தி, மனுவாக அளிக்கும்பட்சத்தில், அதுகுறித்து ஆய்வு மேற்கொண்டு, நிதி ஒதுக்கீடு பெற்று வளர்ச்சிப் பணிகளை நிறைவேற்றப் படும். உள்ளாட்சி அமைப்பு பிரதிநிதிகளின் கருத்துக்களை உள்வாங்கி அவற்றை செயல்படுத்த துறை அலுவலர்கள் நடவடிக்கைகள் மேற்கொள்ள வேண்டும், எனப் பேசினார் .

இக்கூட்டத்தில், மாவட்ட ஆட்சியர் எம். என். பூங்கொடி, மாவட்ட வருவாய் அலுவலர் ஷேக் முகைதீன், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குநர் திலகவதி, பழனி வருவாய் கோட்டாட்சியர் கிசன்குமார், மாவட்ட வன அலுவலர் ராஜ்குமார், தமிழ்நாடு ஊரக வாழ்வாதார இயக்கம் திட்ட இயக்குநர் சதீஸ்குமார், ஊராட்சி ஒன்றியக்குழுத் தலைவர்கள்

அய்யம்மாள், சத்தியபுவனா, மாவட்ட ஊராட்சிக்குழு துணைத்தலைவர் பொன்ராஜ், நகர் மன்ற தலைவர் திருமலைசாமி, நகர்மன்ற துணைத் தலைவர் வெள்ளைச்சாமி, கூட்டுறவு சங்கங்கள் இணைப்பதிவாளர் காந்திநாதன், மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கி மேலாண்மை இயக்குனர் சுபாஷினி, வாடிப்பட்டி ஊராட்சி மன்றத் தலைவர் ஜோதீஸ்வரன் ஒன்றிய செயலாளர்கள் சுப்பிரமணி, தர்மராஜ், ஒன்றிய துணை பெருந்தலைவர்கள் தங்கம், காயத்திரிதேவி, வட்டார வளர்ச்சி அலுவலர்கள் வடிவேல்முருகன், காமராஜ், ஒன்றிய பொறியாளர் விஜயராகவன், நகராட்சி ஆணையாளர் (பொ) சுப்பிரமணிய பிரபு, வட்டாட்சியர் பழனிச்சாமி உட்பட அரசு அலுவலர்கள் பல ஒன்றிய துணைச் செயலாளர்கள் கலந்து கொண்டனர்.


6 ஆம் ஆண்டு

நினைவு அஞ்சலி

தோற்றம் : 10.07.1947

மறைவு : 25.09.2018



தமிழக நவீன சிற்பி பாசத்தலைவர் கலைஞரின் அன்புத்தம்பியாய்

உழைப்பின் சிகரம் தமிழக முதல்வர் தலைவர் தளபதியாரின் - அன்புக்குரியவராய்

கழகத்தின் தடம் மாறா தொண்டராய் வாழ்ந்து மறைந்த

கிருஷ்ணகிரி சட்ட மன்ற முன்னாள் உறுப்பினர் திரு.P.V.ஸ்ரீராமுலு Ex,M.L.A., -வின் மகன்.

முன்னாள் தி.மு.க நகர செயலாளர், ஒன்றிய செயலாளர், மாவட்ட துணை செயலாளர், மாவட்ட அவைத்தலைவர்,

திரு.P.V.S.வெங்கடேசன் Ex,M.L.A.,

காவேரிப்பட்டிணம் சட்ட மன்ற முன்னாள் உறுப்பினர்

1996 - 2001

உங்கள் நினைவில் என்றும்.

PVSV.மணிவிஜயன் B.Sc.,MBA.,

மாவட்ட வர்த்தகஅணி அமைப்பாளர்,கிருஷ்ணகிரி கிழக்கு

திராவிட முன்னேற்ற கழகம்

காவேரிப்பட்டிணம், கிருஷ்ணகிரி மாவட்டம்.